# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2016

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 10

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. எட்டுத்தொகை நூல்களில் ஒன்று

அ) நெடுநல்வாடை ஆ) திருக்குறள் இ) நாலடியார் ஈ) நற்றிணை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. பின்வருவனவற்றுள் சார்பெழுத்து

அ) க் ஆ) ச இ) ட் ஈ) அ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. **பழமொழி :-** பதறாத காரியம் சிதறாது. என்பதன் பொருள்

அ) அமைதியின் வெற்றி ஆ) பட்டறிவு பயன்தரும்

இ) அறத்தின் பெருமை ஈ) நிறைவற்றமனம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. தமிழகத்தின் ஆள்புல எல்லையை விரிவாக்கிய மன்னர்கள்

அ) இராசராசன், எல்லாளன் ஆ) இராசராசன், குலோத்துங்கன்

இ) இராசராசன், இராசேந்திரன் ஈ) சங்கிலியன், இராசேந்திரன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. ஓர் எழுவாயில் பல சொல்லியங்கள் தொடரும் இடங்களில் வரும் நிறுத்தற்குறி

அ) முற்றுப் புள்ளி ஆ) காற்புள்ளி இ) முக்காற்புள்ளி ஈ) அரைப்புள்ளி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. வெள்ளந்திப்பொழுது என்பது

அ) மாலை ஆ) யாமம் இ) இரவு ஈ) அதிகாலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. சேரரது கொடி

அ) புலிக்கொடி ஆ) மீன்கொடி இ) விற்கொடி ஈ) வீணைக்கொடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. அந்நாளில் மெசப்பத்தோமியா என அழைக்கப்பட்ட பகுதிகள்

அ) இந்தியா இலங்கை ஆ) ஈரான், ஈராக்

இ) ஈரான், சவுதிஅரேபியா ஈ) ஈரான், குவைத்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. குயில் கத்தும். இதில் வந்துள்ள வழு

அ) காலவழு ஆ) திணைவழு இ) மரபுவழு ஈ) வினாவழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. ஒவ்வொரு சொல்லுக்கும் வேர்ச்சொல் உண்டு என்று எடுத்துக் காட்டியவர்

அ) காசிஆனந்தன் ஆ) தேவநேயப்பாவாணர்

இ) கண்ணதாசன் ஈ) நக்கீரர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. **யானை, குதிரை, தேர், காலாள்** என்பது

அ) நாற்குணம் ஆ) நாற்படை இ) நாற்திக்கு ஈ) நானிலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. பின்வருவனவற்றுள் குற்றியலுகரம் அல்லாதது

அ) கு ஆ) டு இ) னு ஈ) பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. இலங்கை அரசு சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற சட்டத்தைக் கொண்டு வந்த ஆண்டு

அ) 1956 ஆ) 1975 இ) 1848 ஈ) 1925

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. "கொட்டு தமிழா முரசம் - அட
குறட்டைத் தூக்கம் நிறுத்தடா" எனப்பாடியவர்

அ) கண்ணதாசன் ஆ) மகாகவி உருத்திரமூர்த்தி

இ) காசி ஆனந்தன் ஈ) காளமேகப்புலவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. கண்ணகிக்குப் படிமம் செய்து வழிபட வேண்டும் என சேரன்
செங்குட்டுவனுக்குக் கூறியவர்

அ) தண்டமிழ்ச் சாத்தன் ஆ) மலைவாழ்மக்கள்

இ) வேண்மாள் ஈ) நெடுஞ்சேரலாதன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. பின்வருவனவற்றுள் பண்புத்தொகை

அ) செம்மொழி ஆ) ஏவுகணை இ) பால்பழம் ஈ) மதிமுகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. இந்தியாவுக்கும் பாகித்தானுக்கும் இடையே பாயும் நதி

அ) சிந்து நதி ஆ) கங்கை நதி இ) காவேரி நதி ஈ) குமரி ஆறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. பின்வருவனவற்றுள் உவமைத்தொடர்

அ) தாளம் போடுதல் ஆ) உடலும் உயிரும்போல

இ) எலும்புந்தோலும் ஈ) காதில் பூ வைத்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. அரங்கமாகத் தோன்றும் மருத நிலத்தில் விளக்கேற்றினாற்போல தோன்றுவது

அ) வண்டினம் ஆ) குவளை இ) தாமரைமலர் ஈ) எழினி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. ஆறுவது சினம் என்பது

அ) தனிமொழி ஆ) பொதுமொழி இ) தொடர்மொழி ஈ) வருமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. பின்வருவனவற்றுள் உரிப்பொருள்

அ) நிலம் ஆ) பொழுது இ) மரம் ஈ) ஒழுக்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. குறள் :- பெருக்கத்து வேண்டும் ________________ சிறிய

சுருக்கத்து வேண்டு முயர்வு

அ) பணிதல் ஆ)எழுதல் இ) புகழ்தல் ஈ) உயர்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23) ஒளிநிலாவால் நடனம் ஆடப்பட்டது. இச் சொல்லியம்

அ) தன்வினை ஆ) செய்வினை இ) செயப்பாட்டுவினை ஈ) பிறவினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. குடியுரிமைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள்

அ) கண்டிச்சிங்களவர் ஆ) கரையோரச்சிங்களவர்

இ) யாழ்ப்பாணத்தமிழர் ஈ) மலையகத்தமிழர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25) மாதங்களில் அவள்________________ எனக் கண்ணதாசன் கூறுகிறார்.

அ) ஆவணி ஆ) கார்த்திகை இ) மார்கழி ஈ) ஐப்பசி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26) வில்லுப்பாட்டுக்குழுவில் இடம்பெறுவோரின் எண்ணிக்கை

அ) ஐந்து ஆ) ஆறு இ) ஒன்பது ஈ) ஏழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. பின்வருவனவற்றுள் காரணப்பெயர்

அ) நிலம் ஆ) தொலைநோக்கி இ) இலை ஈ) வானம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28) மட்டக்களப்பு மண்ணில் தோன்றிய பெரும் புலவன்

அ) பாவேந்தர் ஆ) காசிஆனந்தன்

இ) சோமசுந்தரப்புலவர் ஈ) சின்னத்தம்பிப் புலவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. எள்ளுதல் என்பதன் பொருள்

அ) போற்றுதல் ஆ) புகழ்தல் இ) மன்றாடுதல் ஈ) இகழ்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. 1977ஆம் ஆண்டு தேர்தலில் தமிழீழ மக்கள் மிகப் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்த கட்சி

அ) தமிழ்ப்பேராயக்கட்சி ஆ) தமிழரசுக்கட்சி

இ) அடங்காத்தமிழர்முன்னணி ஈ) தமிழர்விடுதலைக்கூட்டணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

**புள்ளிகள் 30**

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. பத்துப்பாட்டு நூல்களில் அகத்திணை நூல்கள் இரண்டினைத் தருக.

2. இந்தியாவின் வட புலத்தை விட்டு தமிழர்கள் ஏன் தென்புலத்திற்குப் புலம்பெயர்ந்தனர்?

3. தேவநேயப்பாவாணருக்கு வழங்கப்பட்ட வேறுபெயர்கள் இரண்டினைத் தருக.

4. சிந்துநதி நாகரிகத்தில் சிறப்புற்று விளங்கிய இரண்டு நகரங்கள் எவை?

5. இலெமூர் என்ற இனம் வாழ்ந்த இடம் எது?

6. மானம் எனும் அதிகாரத்தில் புகழையோ சிறப்பையோ தராத செயல் எது எனக் கூறப்படுகின்றது?

7. திருகோணமலை மாவட்டத்தில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்கள் எவை?

புள்ளிகள் 10

## 3) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

இன்றைய உலகில் எதிர்நோக்கப்படுகின்ற முதன்மை இடர்ப்பாடுகளில் ஒன்றாக ‘உலக வெப்பமயமாதல்’ காணப்படுகின்றது. புவியின் வெப்பநிலை அதிகரிப்பதற்கு கரியமில வளி ($CO_2$) நைதரசன் ஒட்சைட்டு ($n_2O$) போன்ற வளிகள் கரணியமாக அமைகின்றன. எரிமலை வெடிப்பு, காட்டுத்தீ போன்ற இயற்கையின் செயற்பாடுகளும் கைத்தொழிலாக்கம், காடழிப்பு போன்ற மாந்த நடத்தைகளும் இதற்கு அடிப்படையாக அமைகின்றன. புவிக்குரிய வளிமண்டலத்தில் உள்ள ஓசோன் படை சூரியனில் இருந்து வருகின்ற புற ஊதாக் கதிர்களைத் தடுத்து தூய்மையான கதிர்களை உள்நுழைய விடுகின்றது. ஆனால் இன்று ஓசோன் படையில் துளை ஏற்பட்டுள்ளமையினால் உயிர்வாழ்வுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. வெப்பம் அதிகரிப்பதனால் பனிப்பகுதிகள் உருகி கடல் நீர்மட்டங்கள் உயர்வடைந்து தீவுகள் நீருக்குள் மூழ்கி பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதனால் உலக நாடுகள் புவிச்சூழலைப் பாதுகாப்பதற்காக ஒன்றிணைந்த செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. அண்மையில் பாரிசில் நடைபெற்ற cop-21 மாநாடும் இதன் ஒரு பகுதியே. எனவே சூழலை நாம் பாதுகாக்காதுவிடின் பூமிப் பந்தின் ஆயுட்காலம் கேள்விக்குரியதே.

1. இன்றைய உலகில் எதிர்நோக்கப்படுகின்ற முதன்மை இடர்ப்பாடுகளில் ஒன்று எது எனக் கூறப்படுகிறது?

______________________________________________

______________________________________________

2. புவியின் வெப்பநிலை அதிகரிப்பதற்குக் கரணியமான வளிகள் எவை?

______________________________________________

______________________________________________

3. வெப்பநிலையை அதிகரிக்கின்ற மாந்த நடத்தைகள் எவை?

______________________________________________

______________________________________________

4. சூழற் பாதுகாப்பிற்காக பாரிசில் நடைபெற்ற மாநாடு எது?

---

---

5. வளிமண்டலத்தில் சூரியனில் இருந்து வருகின்ற புற ஊதாக்கதிர்களைத் தடுக்கின்ற படை எது?

---

---

**புள்ளிகள் 10**

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை முழுமை ஆக்குக.**

## தாய் நிலம்

| | | | | |
|---|---|---|---|---|
| கூத்தாடி | குலாவி | கொண்டாடிய | நிலவொளியில் | கொப்பாட்டனும் |

எந்தையும் தாயும் நின்று ____________

மன்றலில் மகிழ்ந்த நிலம்

முப்பாட்டனும் ____________ முழவொலிக்க

____________க் களித்த நிலம்

முற்றத்து ____________ பாட்டியின் கதைகேட்டு

பாசத்தோடு வாழ்ந்த நிலம்

முன்றலில் கொட்டகையிட்டு முழுவதுமாக

உறவுகளோடு ____________ நிலம்

இன்று வாழ்விழந்து நிற்கிறதே!

**புள்ளிகள் 10**

## 5) இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் தொகைமொழிகள் எவ்வகையின?

அ. கல்லெறிந்தான் :- ____________

ஆ. வளர்தமிழ் :- ____________

இ. மலைத்தோள் :- ____________

2. குற்றியலுகர எழுத்துகள் எத்தனை? பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுத் தருக.

____________

வன்தொடர்க் குற்றியலுகரம் :-

____________

இடைத்தொடர்க் குற்றியலுகரம் :-

____________

3. பின்வரும் சொல்லிய வகைகளுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

அ. வியங்கோள் :- ____________

ஆ. வியப்பு :- ____________

இ. செப்பு வாக்கியம் :- ____________

4. பின்வரும் நிரற்கூட்டை நிறைவு செய்க.

| வினையடி | பெயரெச்சம் | வினையெச்சம் | வினைமுற்று |
|---|---|---|---|
| கல் | | | |
| பற | | | |

5. பின்வரும் மரபுத்தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

தொணதொண :- ____________

உயரஉயர :- ____________

அல்லும்பகலும் :- ____________

**புள்ளிகள் 15**

## 6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Muhilan enjoys running races in his school. He participates in school sports activities. He was selected in running a race competition in his school. He has won first prize in this competition. He was asked to participate in the big competition with other schools. So he was very delighted. He wanted to win in that competition. He worked hard for it. Every morning he practiced running in the park. He won the first prize on this competition.

Muhilan liebt es an Rennen an seiner Schule teilzunehmen. Er beteiligt sich gerne an seiner Schule an den Sportveranstaltungen. Er wurde ausgewählt an einem Rennwettbewerb seiner Schule teilzunehmen. Er gewann den ersten Platz an seiner Schule. Sie fragten ihn ob er an einem Wettbewerb mit anderen Schulen teilnehmen möchte. Er freute sich sehr und wollte gerne an diesem Wettbewerb gewinnen. Deshalb trainierte er sehr hart dafür. Er stand jeden Tag früh auf und rannte im Park. Er gewann den ersten Platz im Wettbewerb.

Muhilan kan lide at deltage i løb på hans skole. Han deltager i skolens sportsaktiviteter. Han blev valgt i løb på skolen. Han fik første plads i denne konkurrence. Han blev spurgt om at deltage i løb med andre skoler. Han blev glad. Han ville gerne vinde i denne konkurrence. Derfor trænede han hårdt. Hver morgen trænede han i parken. Han vandt første pladsen i denne konkurrence.

Muhilan was blij van hardlopen voor zijn school. Hij neemt deel aan de school sportactiviteiten. Hij werd geselecteerd voor hardlopen van een wedstrijd in zijn school. Hij heeft de eerste prijs gewonnen in deze competitie. Hij werd gevraagd om deel te nemen aan de grote sportdagen met andere scholen. Dus hij was erg blij. Hij wilde winnen in die competitie. Hij werkte hard voor. Elke ochtend oefende hij in het park. Hij won de eerste prijs op deze wedstrijd.

Muhilan è felice di partecipare alla gara di corsa della sua scuola. Lui ha partecipato alle attività sportive della scuola. Lui è stato selezionato per partecipare alla gara di corsa della sua scuola. Lui in questa gara ha vinto il primo premio. A lui è stato chiesto di partecipare ad una grande/importante gara di corsa(che si tiene) tra le altre scuole. Lui era molto contento. Luivoleva vincere quella gara. Per quello lui lavorò duramente. Ogni mattina lui si allenò a correre nel parco. Lui vinse il primo premio.

Muhilan liker løpekonkurranser for skolen sin. Han deltar i skolesportaktiviteter. Han ble valgt til å løpe i en konkurranse på skolen sin. Han vant førstepremie i denne konkurransen. Han ble spurt om han ville være med i en viktig konkurranse mot andre skoler. Han ble veldig glad. Han ville vinne denne konkurransen. Så han trente hardt. Hver morgen løp han i parken. Han vant førstepemie i denne konkurransen.

Muhilan gläds av att tävla i löpning på sin skola. Han deltog i sportaktiviteter i skolan. Han blev utsedd till att delta i en löpartävling på sin skola. Han vann första pris i denna tävling. Han tillfrågades att delta i en stor löpartävling mellan andra skolor. Han blev väldigt glad. Han ville vinna den tävlingen. Han jobbade hårt för det. Varje morgon tränade han i löpning i parken. Han vann första priset.

Muhilan était heureux de participer à une compétition de course à pied dans son école. Il a également participé aux différents jeux proposés par son école. Il a été sélectionné dans son école, pour participer au course à pied. Il a gagné le premier prix. On lui a proposé de participer à une grande compétition avec d'autres écoles. Il était très heureux. Il souhaitait gagner sur cette compétition. Pour cela, il s'est efforcé à s'exercer. Tous les matins, il s'entraina au parc et finalement, il gagna le premier prix.

____________________________________________________________________________________

புள்ளிகள் 05

**7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தமிழர் புலப்பெயர்வு
- புலம்பெயர் நாட்டில் தமிழர் பண்பாடு
- மானம் பற்றி வள்ளுவர் கூறியவற்றைத் தொகுத்து எழுதுக.

புள்ளிகள் 20